தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST






சமாரியா

## Samaria

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
**B. அர்ஜுனன்**

மரம் 13 செப்டம்பர் 2013 கனி 10

---


R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office
on 10 th Sep. 2013


Owned and published by B. Arjunan from 17.2.102
D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed
by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24
Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.



BATLAGUNDU CHURCH OF CHRIST
MEETS HERE
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com


To

தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத்
தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும்
தொழுதுகொள்ளவேண்டும் – யோவான் 4:24



Trichy Church of Christ
Eva.Bro.Kanagaraj

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



# World Evangelism Gospel Media



## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(TAMILNADU Contact Mobile: 9443558041)*

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:

TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** *(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. *(KERALA Contact Mobile: 9447035465)*

## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:

TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. *(TAMILNADU Contact Mobile: 9244214421)*

## Rajanayagam in Tamil on Tamilan TV:

TV:Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 p.m. *(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:

TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. *(NEW DELHI Contact Mobile: 09810896789)*

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 157

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. கர்த்தர் உன்னைப் பஸ்கூர் என்று அழைக்காமல் என்னவென்று அழைக்கிறார் என்ற தீர்க்கன் யார்?
2. எவர்களைப் பார்த்து இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்?
3. கர்த்தர் நீதிபரர்; அவருடைய வாக்குக்கு விரோதமாய் நான் எழும்பினேன், என்று புலம்பும் தீர்க்கன் யார்?
4. கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா?
5. உங்கள் பிதாக்களுடைய மார்க்கத்தின்படியே நீங்களும் தீட்டுப்பட்டவர்கள் அல்லவோ? என்று கர்த்தர் யாரை நோக்கி சொன்னார்?
6. புறம்பே இருக்கிறவர்களைக் குறித்துத் தீர்ப்புச் செய்கிறது என் காரியமா? என்ற அப்போஸ்தலன் யார்?
7. உன்னதமான தேவன் என்னிடத்தில் செய்த அடையாளங்களையும் அற்புதங்களையும் பிரசித்தப்படுத்துவது எனக்கு நன்மையாய்க் கண்டது என்ற ராஜா யார்?
8. சத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச்செய்தேன், அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக்கொண்டாய்; ஆனாலும் என்னிடத்தில் உனக்கு என்னவுண்டு என்று கர்த்தர் சொன்னார்?
10. விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே எவரின் பிள்ளைகளென்று அறிவீர்களாக என பவுல்யாரைக்குறித்து எழுதுகிறார்?

- சமாரியா இஸ்ரவேலின் வடக்கு ராஜ்யத்தின் தலைநகரமாக இருந்தது.
- சமாரியா 108-ல் ஜான் கிர்கேனஸ் என்பவரால் அழிக்கப்பட்டது.
- சமாரியா சேமேரின் கையிலிருந்து வாங்கப்பட்டது - 1இரா.16:24.
- யாக்கோபுடைய கிணறு இருந்தது - யோவா.4:6
- சமாரியாவைச் சார்ந்தவன் குற்றுயிராக கிடந்தவனுக்கு உதவி செய்தான்.
- இயேசு சமாரிய பெண்ணிடம் தாகத்திற்கு தண்ணீர் கேட்டார் - யோவா.4:8




சமாரியா

Samaria



சிறுவர் பகுதி

# விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தியவர்கள்

வேத பகுதி: 1தீமோத்தேயு1:19,20



சிறுவர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.

முதல் நூற்றாண்டிலே விசுவாசமாகிய கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்திய தாக பவுல் விசுவாசத்தில் உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அப்படி எந்த விசுவாசமான கப்பலைச் சேதப்படுத்தினார்கள் என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். சபையை விசுவாசமான கப்பல் என்று பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசிக்கிறவர்கள் இந்த கப்பலாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பார்கள். நோவா ஒரு பேழையை உண்டுபண்ணினார் அதுவும் விசுவாசபேழைதான் ஏனென்றால் மழை இல்லாத காலத்தில் பேழையை கட்டினார். உலகம் ஜலத்தினால் அழியப்போகிறது என்று சொல்லியும் ஜனங்கள் நம்பவில்லை. தேவன் மழையை 40 நாள் வருஷிக்கப்பண்ணியபோது ஐயோ! ஐயோ! என்று சொல்லி கூக்குரலிட்டிருக்கக்கூடும். நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு இந்த விசுவாசமான பேழையை அதாவது கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்துகிறார்கள். எப்படியென்றால் சபையில் பிரிவினையை ஏற்படுத்துவது. கப்பலை சேதப்படுத்துவதற்குச் சமம். அப்படி சேதப்படுத்தினால் என்னவாகும்? கப்பல் தண்ணீரில் மூழ்கிவிடும் இல்லையா! அதைப்போல சபையை பாழடிக்க எண்ணம் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுங்கள் என்கிறார். பவுல், அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தார். பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆகையால் நாமும் அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுப்போம். சில சமயங்களில் நாம சொன்னபடி கேட்காவிட்டால் அப்பா அம்மா இப்படி சொல்லுவாங்க, அந்த கரடிகிட்ட இவனை புடிச்சுகொடுத்திடுவோம் என்று இல்லையா? ஆமாம் நாம விசுவாசத்தின் கப்பலை சேதப்படுத்தாது, அது விசுவாசத்தில் முன்னோக்கி செல்வதற்கு நாம உதவியாயிருக்கணும். இருப்பீங்களா!

**மனப்பாட வசனம்:**

"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்"-1பேதுரு5:8




திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 13 செப்டம்பர்-2013 கனி - 10

ஆசிரியருரை

## ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும்?

*How Should Be A Christian?*



குடும்பத்தின் மத்தியிலும், சபையின் மத்தியிலும், சமுதாயத்தின் மத்தியிலும் ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும்?

**முதலாவது குடும்பத்தின் மத்தியில் ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும்** என்று தியானிப்போம். அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும்" (1தீமோ.3:5-7). இது மூப்பர்களுக்குரிய தகுதிகளில் சில என நாம் அறிகிறோம். ஒரு மூப்பனானவன் சபையின் முன்மாதிரி கிறிஸ்தவனாயிருக்கிறான். அவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருப்பானேயானால் அவன் தேவனுடைய சபையை விசாரிப்பது அரிதான காரியம். முதலாவது அவன் தன் சொந்தக் குடும்பத்தை அறிந்தவனாயிருக்கவேண்டும். இல்லையேல் பார்ப்பவர்கள் என்னசொல்லுவார்கள். தன் குடும்பத்தை சரியாக நடத்த தெரியவில்லை. பின்பு எப்படி இவன் சபையை நடத்துவான் என்று ஜனங்கள் கேலியாக பேசுவதற்கு இடம் உண்டாகும்.

புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயும் இருக்கவேண்டும் என காண்கிறோம். ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்தவனாகவே இருப்பானேயானால் இன்று உலகில் உள்ள எல்லோரும் கிறிஸ்தவர்களாக மாறியிருப்பார்கள். கிறிஸ்தவனுடைய ஜீவியம் அநேக வேளைகளில் ஜனங்கள் மத்தியில் இடையூராகவே இருக்கிறது. நற்சாட்சி இல்லை, கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. தேவன், முதலாவது ஒரு கிறிஸ்தவன் குடும்பத்தின் மத்தியில்

நற்சாட்சியுள்ளவனாயிருக்கவேண்டுமென எதிர்பார்க்கிறார். ஆகையால், ஆவியானவர் பவுலைக்கொண்டு எழுதும்போது; “ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்” என எழுதுகிறார் (1தீமோ.5:8). ஒரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்தில் அவன் தன் சொந்த ஜனங்களை விசாரிக்கிறவனாயும், விசேஷமாகத் தன்வீட்டாரை விசாரிக்கிறவனாயுமிருக்கவேண்டும். பொதுவாக பாருங்கள் மற்றவர்களை நன்கு விசாரிப்பார்கள். தன் குடும்பத்தாரை விசாரியாமல் எப்பொழுது பார்த்தாலும் எங்களுடைய வீட்டில் அப்படித்தான் என்று சொல்லி சலித்துக்கொள்வார்கள். அப்படியில்லாது தன் குடும்பத்தாரை முதலாவது நேசிக்கிறவர்களாயிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக பாருங்கள். வேதாகமம் நமக்கு கொர்நேலியுவை மாதிரியாக காட்டுகிறது. இவன் இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாக இருந்தான். இவன் தேவபக்தியுள்ளவனாயும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான் என்று அப்.10:1,2 வசனங்களில் வாசிக்கிறோம். பட்டாளத்தில் பலவிதமான வேலைகள் இருந்திருக்கும். ஒருவேளை ஜெபிப்பதற்கு கூட நேரமில்லாமல் இருக்கும். எந்த நேரம் யுத்தம் வருமோ என்ற அச்சத்தோடு இருக்கநேர்ந்திருக்கும். ஆனால் கொர்நேலியுவோ அப்படியல்ல அவன் முதலாவது தேவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து தன் வீட்டாரோடு தேவனுக்கு பயந்தவனாயிருந்திருக்கிறான். நாம் நம்முடைய குடும்பங்களை பக்திக்குள்ளாக வளர்த்திடுவோமானால் குடும்பமாக தேவனுக்கு பணியாற்றுவது சுலபமாகிவிடும். இதைச் செய்ய அநேகர் தவறிவிடுகின்றனர். ஆனபடியால் குடும்பத்தார் அநேக வேளையில் கர்த்தருடைய காரியங்களுக்கு இடையூராகவே இருப்பார்கள். கொர்நேலியு தன் குடும்பத்தை முதலாவது ஆதாயம் செய்தபடியால் அநேக தானதருமங்களை கூட செய்யமுடிந்தது. தன் குடும்பத்தை அவர் ஒருவேளை ஆதாயப்படுத்தாதிருந்திருந்தால் என்ன நடந்திருக்கும். அவருடைய குடும்பமே அவர் செய்ய விரும்பும் தானதருமங்களுக்கு எதிராக செயல்பட்டிருப்பார்கள். அவராலும் தானதருமங்களை செய்யமுடியாமற்போயிருக்கும். நாம் ஒரு நல்ல கிறிஸ்தவனாயிருக்க வேண்டுமானால் முதலாவது நம்முடைய குடும்பத்தை ஆதாயம் செய்யவும், அவர்களை பக்திக்குள்ளாக வளர்க்கவும் பிரயாசப்படவேண்டும்.

இரண்டாவது, **சபையின் மத்தியில். ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும்** என நாம் தியானிக்கும்போது; வேதம் போதிக்கிறது; “நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த



1.துக்கமான அல்லது சந்தோஷமான சூழ்நிலையில் இசைக்கப்படுவதைப் பற்றி 44 முறை புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால் வெளிப்படுத்தின விசேஷத்தில் தவிர தொழுகையோடு தொடர்பாக ஒரு இடத்திலும் இல்லை.

2. அப்படியாக நாம் தொழுகையில் இயேசுவின் நாமத்தில் பாடலாம் ஆனால் இயேசுவின் நாமத்தில் கருவிகளை இசைக்க முடியாது.

3.ஏனென்றால் இயேசு அதற்கு அதிகாரங் கொடுக்கவில்லை.

4. பிளாயிட் டெக்கர் அவர்களுக்கும் சகோதரர் வில்காக்ஸ் அவர்களுக்கும் இடையே நடந்த 5 நாள் விவாதத்தைப் பற்றி சொல்லுங்கள். டெக்கர் அவர்கள் தல சபையின் பேச்சாளராக 30 நிமிடங்கள் தன் சொல்லாற்றலால் முதலாவது இசைக் கருவிகளை பயன்படுத்துவதற்கு ஆதரவாக பேசினார். அடுத்து வில்காக்ஸ் அவர்கள் எழுந்து கரும்பலகையில் ஒரு பக்கம் பாடும்படி புதிய ஏற்பாட்டில் அதிகாரங் கொடுத்துள்ள வசனங்களையும், அடுத்த பக்கத்தில் ஒரு வட்டம் வரைந்து அதில் டெக்கர் அவர்கள் புதிய ஏற்பாட்டில் எந்த இடத்தில் இசைக்கருவிகளை பயன்படுத்த அதிகாரங் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை எழுதினால் விவாதம் முடிந்துவிடும் என்று எழுதினார். இரண்டே நிமிடங்கள் பேசிவிட்டு அமர்ந்தார். டெக்கர் எழுந்து வில்காக்ஸ் அவர்களை கேலி பேசிவிட்டு இசைக் கருவிகளுக்கு ஆதரவாக தனது வழக்கமான ஆதரவை அறிவித்தார். வில்காக்ஸ் மறுபடியும் 2 நிமிடங்கள் பேசிவிட்டு அமர்ந்தார். அடுத்த நாள் ஒரு மூப்பர் வந்து டெக்கரின் அலுவலகத்துக்கு வந்து ஏன் அவர் கரும்பலகையில் ஒரு வசனத்தை எழுதவில்லை என்று கேட்டார். அதற்கு டெக்கர் அந்த வசனம் எங்கிருக்கிறது என்று வந்த மூப்பர் சொல்லால் எழுதிவிடுவேன் என்றார். “நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?” டெக்கர் சொன்னார்: எனக்குத் தெரியாது ஆனால் இது போல் இன்னும் நான்கு இரவுகள் இருக்கின்றன.

ஐந்து நேரத்திற்கு பின்பு டெக்கர் வில்காக்ஸ் அவர்களிடம் சென்று தான் தப்பு செய்து விட்டேன் என்று மன்னிப்பு கேட்டார். இன்றைக்கு இதுபோன்ற அறிக்கையை செய்வதற்கு வெகு சிலரே இருப்பர் மற்றவர்கள் இது போன்ற கருத்துக்கள் கலந்து பேச தகுதியுள்ளவைகள் என்று கூட நினைப்பதில்லை.

இ.சிலர் நமக்கு சபை கூடும் கட்டிடம் அல்லது பாட்டு புத்தகம் ஆகியவற்றை வைத்துக் கொள்ள எவ்வளவு அதிகாரமுள்ளதோ அவ்வளவு அதிகாரம் பியானோ வைத்துக் கொள்ளவும் இருக்கிறது என்கின்றனர். இவை இரண்டுமே வேதத்தில் குறிப்பிடப்படவில்லை.

1. தொழுகைக்காக நாம் கூடிவரவேண்டுமென்று கட்டளையிடப்பட்டுள்ளது. இதற்கு அவசியமாக ஒரு இடம் தேவைப்படுகிறது. (விலைக்கு வாங்கியோ அல்லது வாடகைக்கு எடுத்தோ) ஒரு மரத்தடியிலோ அல்லது ஒரு வீட்டிலோ.

2. பாடவேண்டுமென்று நாம் கட்டளையிடப்பட்டுள்ளோம் அப்படியென்றால அதில் பாட்டு புத்தகங்கள் அவசியமாயிருக்கிறது. இது நாம் பாட உதவுகிறது.

3.ஒரு கருவி என்பது பாட உதவும் ஒன்றல்ல மாறாக அது பாடலிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு இசையாகும்.

முடிவுரை:

1. யாரும் இசைக்கருவியை உபயோகிக்கலாம் என்று ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. ஏனென்றால் நீண்ட கால ஆய்வுக்குப் பிறகு அது தேவனுடைய திட்டத்தின் படியானது என்று அவர் தீர்மானித்தார்.

2. அது அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது ஏனென்றால் மதரீதியாக நடைமுறையில் தேர்ந்தெடுப்பதற்கு அது சவுகரியமான ஒன்றாக இருக்கிறது. வேறு வார்த்தையில் சொல்வாரென்றால் நாம் அதை விரும்புகிறோம் அல்லது மற்ற எல்லோரையும் போல இருக்க விரும்புகிறோம். ஆனால் மறுபடியும் இது மனிதனுடைய மாம்ச வாழ்க்கைக்கு பிடித்ததாகவே இருக்கிறது.

3. தனிமனிதனாக ஒருவேளை நாம் ஆதரிக்காவிட்டாலும், இசைக்கருவிகள் வாசிப்பதையும் நாம் சார்ந்துள்ள சபையில் இதை வாசித்தால் அதன் பயன்பாட்டுக்கு நீங்கள் ஆதரவளிக்கிறீர்கள்.

4. இதே கொள்கை வேறு அநேகவற்றிக்கும் பொருந்தும். நவீன கால மத நம்பிக்கை அதிகாரமளிக்கப்படாத அநேகத்தை சேர்த்துக்கொள்ளுகிறது. (தூபம் கட்டுவது) சாம்பிராணி புகைப்பது பக்தி நடனம், மெழுகு வர்த்தி ஏற்றுதல், இறுதிச் சடங்குகள் மற்றும் பல.

4. தேவன் சொன்னபடி அதிகாரமளித்தபடி செய்வதில் மட்டும் நீங்கள் திருப்தியடைகிறீர்களா?

-மீண்டும் அடுத்த பாடத்தில் சந்திப்போம்

ஆ.பக்தி மார்க்கத்தில் சொல்லப்பட்டபடி செய்வது நமக்கு பிரச்சனையாயிருக்கிறது. அனால் அதனுடைய முக்கியத்துவத்தை நாம் மற்ற செயல்பாடுகளில் புரிந்து கொள்ளுகிறோம்.

1. சமையல் சமையற் குறிப்பில் 4 முட்டைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.வேறு எண்ணிக்கையில் பயன்படுத்தினால் அது சமையற் குறிப்பை மாற்றுவது மட்டுமல்ல அதன் ருசியும் மாறுபடும்.

2. திருமண வரவேற்பில் தேதியும் நேரமும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேறு எந்த நாளையும் நேரத்தையும் இது தவிர்க்கின்றது.

இ. நோவா: “நோவா அப்படியே செய்தான் தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்” (ஆதி.6:22).

1. கொப்பேர் மரத்தினால் ஒரு பேழையை செய்யச் சொல்லி உள்ளும் புறமும் அப்படியே ஓரிடத்தில் நிறுத்தச் சொன்னார்.

2. அவருக்கு பேழையினுடைய சரியான அளவைக் கொடுத்தார், எத்தனை அடுக்குகள், சன்னல்கள். கதவுகள் மற்றும் அதன் அளவுகளைக் கொடுத்தார்.

3. எத்தனை மிருகங்களை பேழைக்குள் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்.

4. தேவன் சொல்லியபடியே நோவா செய்தார். எந்த மாற்றமும் கீழ்ப்படியாமையாகும். நோவா அதற்குரிய விலையைக் கொடுத்திருப்பார்.

ஈ. மத்தேயு 26

1. இயேசு திருவிருந்தை ஏற்படுத்தினார். அதில் அப்பமும் திராட்சைரசமும் பயன்படுத்தும் படி சொன்னார்.

2. சிலர் தேனும் கொக்கோ கோலாவும் கூட சரியானதுதான் என்று வாதிடுகின்றனர்.

3. நாம் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் பயன்படுத்துகிறோம். ஏனென்றால் இயேசு அப்படி செய்யும்படி சொன்னதால்

III. புதிய ஏற்பாடு பாட மட்டுமே அதிகாரமளிக்கிறது.

அ.சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம் பண்ணி (எபேசியர் 5:19).

1.“பாடிக் கீர்த்தனம் பண்ணி என்ற வார்த்தைகளில் இசைக்கருவியும் உள்ளடக்கப்பட்டதே என்று அநேகர் சொல்கிறார்கள் பாட்டிற்கு சபையின் பிரசங்கியார் ஒருவர் இசைக் கருவி இல்லாமல் பாடமுடியாது என்கிறார். அவர் சார்ந்திருந்த பிரிவினை சபையாரே அநேக வருடங்கள் இசைக் கருவிகளின் உபயோகத்தை எதிர்த்தனர். அனைத்து பேரறிவாளிகளும் ஆதித்திருச்சபையில் வாய்ப்பாடல் மட்டுமே இருந்தது என்பதை யுதர்களின் 22 சங்கங்களிலும் ஜெப ஆலயங்களிலும் மேலும் கிரேக்கர்கள் தங்கள் விக்கிரக வழிபாட்டின் போதும் இசைக் கருவிகளை பயன்படுத்தியிருந்தாலும் ஆதித்திருச்சபையில் வாய்ப் பாட்டு மட்டுமே இருந்தது என்பதை பேரறிவாளர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அது உண்மையாய் இருக்குமானால் ஏன் பவுலும் ஆதித்திருச்சபையினரும் (இசைக் கருவியை) பயன்படுத்தவில்லை?

2. குறிப்பிடப்பட்டுள்ள கருவி இதயம். இது புதிய ஏற்பாட்டின்படியான ஆவிக்குரிய தொழுகையானது பழைய ஏற்பாட்டின் படியான சரீரப் பிரகாரமான தொழுகைக்கு வேறு பட்டதாயிருக்கிறது.

3. கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக் கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடி” (கொலோசெயர் 3;16). ஆவிக்குரியதைத்தான் இங்கே மறுபடியும் வலியுறுத்துகின்றார்.

ஆ. 13 வசனங்கள் தொழுகையில் பாடுவது தொடர்பாக விவரித்து சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பிடப்பட்டுள்ள ஒரே இசை வாய்ப்பாட்டு.



மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்” என்று (எபே.4:1-3). ஒரு கிறிஸ்தவன் தான் எதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஒருபோதும் மறந்துபோய்விடக்கூடாது. அந்த அழைப்புக்குப் பாத்திரவான்களாய் எப்பொழுதும் நடக்க பிரயாசப்படவேண்டும். இப்போது எனக்கு மூடு சரியில்லை என்று சொல்வதோ, நேரம் சரியில்லை என்று சொல்வதோ தவறு. பாத்திரவான்களாய் நடந்து மிகுந்த மனத்தாழ்மையை காண்பிக்கவேண்டும். நம் ஆண்டவர் இயேசு தம்மை தாமே வெறுத்து அடிமையின் சாயலானார் என காண்கிறோம். அதைப்போல நான் ஒன்றுமில்லை என் இயேசுவுக்கு முன்பாக நான் எம்மாத்திரம், அவர் எனக்காக என்னவெல்லாம் செய்திருக்கிறார். நான் அவருக்காக வாழுவேன் என்ற தீர்மானத்தோடு நம்மை முழுவதுமாக அவருடைய சமுகத்தில் தாழ்த்தும்போது கர்த்தர் நம்மையும் எடுத்து அவருடைய காரியங்களினிமித்தமாக பயன்படுத்துவார். நீடிய பொறுமை மிகவும் அவசியம். அதைப்போல ஒருவரையொருவர் தாங்கவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் தோள்கொடுத்தார்கள். அதைப்போல நாமும் மற்றவர்களை தாங்கி ஒருவர்பேரில் ஒருவருக்கு குறை இருக்குமானால் கிறிஸ்து நம்மை மன்னித்ததுபோல அவர்களை நாம் மன்னிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்யும்போது நாம் சபையின் மத்தியில் ஒரு நல்ல கிறிஸ்தவனாயிருக்க முடியும். மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது; “கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்” என்கிறார் (2கொரி.5:14,15). கிறிஸ்துவினுடைய அன்பு ஆகாப்பே அன்பாக இருக்கிறது. இந்த அன்பை சபையில் உள்ள எல்லாரிடமும் காட்டவேண்டும். அப்பொழுது சபையில் தேவனுடைய ஆசீர்வாதங்கள் நிறைந்துகாணப்படும். யூதாஸை போல சிலர் இருப்பதால் சபையானது பாழாக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்களோடு கலவாதிருங்கள்.

மூன்றாவது, **சமுதாயத்தின் மத்தியில் ஒரு கிறிஸ்தவன் எப்படியிருக்கவேண்டும்** என நாம் தியானிக்கும்போது; கர்த்தர் தம்முடைய மலைப்பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். “நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது” (மத்.5:14). நம்மை உலகத்துக்கே வெளிச்சமாக வைத்திருக்கிறார். உலகத்துக்கு வெளிச்சங்கொடுக்கக்கூடிய நாம் இருளாயிருந்தால்

உலகம் எதைப்பார்க்கும்? இங்கே நாம் சிந்திக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். உலகத்திற்கே ஒளியாக இயேசு வந்தார். இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசைகளிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தில் சொல்லப்பட்டபடியாக இருளின் அதிகாரத்திலிருந்தவர்களுக்கு ஆண்டவருடைய வெளிச்சம் கிடைத்தது. அந்த ஒளியை வாங்கி பிரதிபலிக்கிறவர்களாக நாம் இருக்கிறோம். நீங்கள் இருளிலுள்ள ஜனங்களுக்கு வெளிச்சமாக இருக்கிறீர்களா? உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு! விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. ஒவ்வொரு நாளும் புறஜாதிமக்கள் கிறிஸ்தவர்களை உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். புறஜாதிகளில் ஆயிரம் தவறுகள் நடந்தாலும் அதை அவர்கள் கண்டுகொள்ளமாட்டார்கள். ஆனால் ஒரு கிறிஸ்தவன் தவறுசெய்யும்போது, அதை உற்றுநோக்குவார்கள். இவனெல்லாம் ஒரு கிறிஸ்தவனாம் இவன் இப்படிச் செய்யலாமா? என கேள்வி எழுப்புவார்கள். ஆகையால் இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே, தேவனுடைய ஜனங்களே, உன் மூலமாக கிறிஸ்துவினுடைய நாமம் மகிமை குறைச்சல் அடையும்படியாக இடம்கொடாதே. மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாகப் பிரகாசமாயிருக்க பிரயாசப்படுங்கள். அதற்காக உங்களை ஒவ்வொரு நாளும் ஆயத்தப்படுத்துங்கள். உங்களிலிருக்கிற தீமைகளை உங்களை விட்டு அகற்றுங்கள் ஒவ்வொரு நாளும் தேவசித்தம் செய்யநாடுங்கள். தபீத்தாள் என்ற பெண் முதல் நூற்றாண்டு காலத்தில் ‘‘அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள்’’ என அப்.9:36-ம் வசனத்தில் படிக்கிறோம். அந்த உத்தம சீஷியைப்போல மாறுங்கள். ஒரு நல்ல கிறிஸ்தவர்களக குடும்பத்தின் மத்தியிலும், சபையின் மத்தியிலும், சமுதாயத்தின் மத்தியிலும் இருக்கப்பிரயாசப்படுங்கள்.

**நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தால் யாருடைய சந்ததியாயிருக்கிறீர்கள்?**

நாம் பலவேளைகளில் நாங்கள் இந்த பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்று பெருமையாக சொல்லிக் கொள்வதுண்டு பரிசுத்த வேதாகமம் ஒரு பரிசுத்த சந்ததியை, வாக்குத்தத்த சந்ததியை அடையாளம் காட்டுகிறது. அது எதுவென்றால் ஆபிரகாமின் சந்ததி. இந்த சந்ததியில் இயேசு வந்தார். இது விசுவாச சந்ததி என்றும் அழைக்கப்படுகிறது. ‘‘நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின்



# துவாலையின் பாடம் -2

## Lessons of the Towel

*- Jerry Bates*

**தொழுகையில் இசைக் கருவிகளைப் பயன்படுத்துவது கொலோசெயர் 3:16-17**

**-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை**

1. கிறிஸ்துவமார்க்கத்தின் வரலாற்றில் உபதேசங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் இருந்ததுண்டு.
2.அப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகளுள் இசைக் கருவிகளைப் பற்றியதும் ஒன்று சபைகள் இந்த விஷயத்தில் மாறுபட்டு பிரிந்திருக்கின்றன.
3. இன்று சிலரே இதைக் குறித்து உண்மையான கரிசனையுடயவர்களாயிருக்கின்றனர்.
4. இன்று சபையில் அநேகர் இதை எதிர்ப்பதில்லை சில பிரசங்கியார்கள் சபை தன்னை மாற்றிக் கொள்ளவேண்டும் காலம் மிகவும் இருண்டதாயிருக்கும் என்கின்றனர். அதாவது இவைகளை எதிர்த்து இயங்கக்கூடிய சிறு சிறு சபைகளைத்தவிர வேறு சபைகள் இருக்காது என்கின்றனர்.
5. வேதம் பல விதமான தொழுகைகளைப் பற்றி விளக்கிச் சொல்கிறது. சுய விருப்பத்தின்படி தொழுது கொள்வது, வீணான தொழுகை அறியாமையில் தொழுது கொள்வது மற்றும் உண்மையாய்த் தொழுது கொள்வது. ஆனால் ஒரே ஒரு விதமான தொழுகை மட்டுமே தேவனுக்கு ஏற்புடையது.

I. நாம் அதை பயன்படுத்துவதில்லை என்று சிலர் சொல்கிறார்கள்.

அ. நாம் மாறுபட்டவர்களாயிருக்க விரும்புகிறோம்.

1. பிடிவாதமாக இருப்பது
2. வித்தியாசமாக காணப்பட விரும்புவது
3. தொல்லை கொடுப்பவர்களாக இருப்பது ஆகாப் எலியாகூட தொல்லை கொடுப்பவர் என்று கூறப்பட்டார். இஸ்ரவேலை கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா? (1இரா.18:17).

ஆ. நல்ல இசை தெரியாது அல்லது இசையில் விருப்பமில்லை.

1. நான் ஒரு இசைகலைஞனல்ல அல்லது நல்ல இசையை கற்றுக் கொடுக்கவில்லை.
2. மற்ற அநேகர் இசையை நன்கு கற்றுக் கொடுக்கும் பள்ளிகளை விரும்புகிறார்கள். புத்தகங்கள் வாயிலாக இசையை அறிந்திருக்கிறார்கள். அநேக இசைக் கருவிகளை இசைக்கிறார்கள் மற்றும் பல வழிகளில்..
3. அநேகமாக எல்லா சபைகளிலும் ராகத்தோடு பாடுவதற்கேற்ப இசைக்கக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்கள்.

இ. பாரம்பரியத்தில் கட்டுண்டவர்கள்

1. எது புதிதாயிருந்தாலும் அதற்கு நாம் எதிரிகள்.
2. நான் கைக்கொள்ளுகிற எல்லாமே பாரம்பரியம் தான் என்று சில பிரசங்கியார்கள், சொல்லுகிறார்கள்.

II. இதைக் குறித்த மூல வாக்கியம்.

அ. கொலோசெயர் 3:17

1. இதன் அர்த்தம் கிறிஸ்துவின் அதிகாரத்தை எல்லாவற்றிலும் மதித்து நடப்பதாகும்.
2. தனிப்பட்ட ஒழுக்க நெறி மற்றும் நன்னடத்தை தொடர்பனவற்றில் இது உண்மையாகும்.
3. இது நம்முடைய எண்ணங்கள், செயல்கள், இரகசியமானவற்றில் கூட உண்மையாகும்.
4. இது கிறிஸ்தவர்களின் பொது கூடுகைகளில் செயல்பாட்டுக்கு பொருந்துவதாகும். தத்துவம் (அல்லது விதி). தேவன் நம்மிடம் ஒன்றைச் செய்யவேண்டுமென்றும் அதை எப்படிச் செய்யவேண்டுமென்றும் சொல்லியிருக்கும்போது அதை நாம் அவர் சொல்லியது என்னவோ அதை சொல்லியபடியே செய்யவேண்டும்.

## கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் கொண்டு வந்த காணிக்கை

**தங்கம்:** Gold, The Land of Arabia. ஓப்பீரின் தங்கம் விலையேறப்பெற்றது (1இரா.10:11) சாலொமோன் காலத்தில் கர்த்தருடைய ஆலயத்திற்கென்று இவைகள் பயன்படுத்தப்பட்டது.


மத்தேயு 2:11

**தூபவர்க்கம்:** An Aromatic gum, White Substance by various species of trees, when heated or burned it produces a pleasant. இவைகள் தென் அரேபியா மற்றும் கிழக்கு ஆப்பிரிகா, யோர்தான் பகுதிகளிலும் சேபா நாடுகளிலும் (ஏசா.60;6; எரே.6:20). இதை இஸ்ரவேலர்கள் பயன்படுத்தினர் (யாத்.30:37). ஆண்டவர் இயேசுவுக்கு பிறப்பின்போது கொடுக்கப்பட்டது (மத்.2:11). ஆசாரியர்கள் தகனபலியோடு செலுத்தினார்கள் (லேவி.2:1,21).

**வெள்ளைப்போளம்:** Frankincense, Myuuh, Arabia, Abyssinia and India, நாடுகளில் கிடைத்தது. Form the bark of trees, Myrrh has long been a luxury item valuable as a perfume. To be heavily perfumed with oil containing myrrh (எஸ்.2:12). Anointing oil of the tabernacle (யாத்.30:23). இயேசுவுக்கு இவைகளை சாஸ்திரிகள் கொடுத்தார்கள் (மத்.2:11)இயேசு சிலுவையில் தொங்கும்போது இவைகளை குடிக்கக் கொடுத்தார்கள் (மாற்.15:23).

## "தேவன் விரும்பும் ( ஆராதனை) வழிபாடு"

*-John S. Nathan -94444 43378*

- சென்ற மாத தொடர்

1. **மனிதவழிபாடு: ANTHROPOLATRY** - மனிதன் உயிராய் இருக்கும்போதும் இறந்த பின்பும் ஆராதித்து வழிபடுதல்.
2. **சூரிய வழிபாடு: Worship of the Sun** - சூரியன் மற்றும் இயற்கையை தேவன் படைத்தவைகளை ஆராதிப்பது.
3. **பேய் வழிபாடு: DEMONOLATRY** - பேய்களை வழிபடுதல்
4. **மரங்களை வழிபடுதல்: DEMONOLATRY** - மரங்களுக்கு ஆடை அணிவித்து; அலங்கரித்து ஆராதிப்பது.
5. **நிலவு, நட்சத்திரங்களை வழிபடுதல்: ASTROLATRY**
6. **சிலை, வரைந்த படங்களை வழிபடுதல்; IDOLATRY**
7. **மரியாள் வழிபாடு: MARIOLATRY** - மரியாளை கன்னியாகவே எண்ணி வழிபடுதல் (அவளுக்கு 4 மகன்களும் 2க்கு மேற்பட்ட மகள்களும் இருப்பதை எண்ணிடாமல்) மாற்.3:31,32

**– தொடர்ச்சி அடுத்த இதழில்**



சந்ததியாயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" என்கிறார் பவுல் (கலா.3:29). யூதனென்றும் இல்லை புறஜாதியானென்றும் இல்லை நாமெல்லாரும் கிறிஸ்துஇயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறோம். இன்று அநேகர் இந்த உண்மையை புரிந்துகொள்ளாமல், நான் அவனை சேர்ந்தவன் என்றும் இவனைச் சேர்ந்தவனென்றும் சொல்வதைக்கேட்கிறோம். நாம் கிறிஸ்து இயேசுவைப் பின்பற்றும் ஒரு கிறிஸ்தவனாயிருப்போமானால் நாம் ஆபிரகாமின் சந்ததியாய் இருக்கிறோம். தேவன் வாக்குத்தத்தம் செய்தபடி சுதந்தரவாளிகளாகவும் இருக்கிறோம். சுதந்தரவாளிகள் என்றால் உரிமையாளர்கள். பரலோகத்திற்கு சொந்தக்காரர்கள். இப்படிப்பட்ட ஆசீர்வாதம் நிறைந்த வாழ்க்கையை நழுவவிடாதீர்கள். இந்த சந்ததியில் நிலைத்திருந்து நித்திய ஆசீர்வாதத்தைப் பெற காத்திருங்கள். உங்களுடைய நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

✦ சென்னையில் சகோ.ரீகன் செய்து வரும் ஊழியங்களுக்காக...

✦ அடுத்தமாதம் நடைபெறவுள்ள சகோ.ஜெரி அவர்களுடைய ஊழியங்களுக்காக...

**ஜெபியுங்கள்**

✦ இவ்வூழியத்தை தாங்கும் அனைத்து சகோதர சகோதரிகளுக்காக...



**வேத அறிவுப்போட்டி: 156 -ன் விடைகள்**

1. சாத்தான் - யோபு2:7
2. வெறுக்கிறார் - வெளி.2:15
3. தாவீது - சங்.42:1
4. கொலை - மத்.21:39
5. நீதிமானுடைய, துன்மார்க்கனுடைய - நீதி.10:7
6. யோவானுக்கு - மாற்.6:19
7. பூமியோ - பிர.1:4
8. பரிசேயர் - லூக்.16:15
9. ஆறகளையும் - ஏசா.44:3
10. யூதாஸ் - யோவா.13:27

**வேத அறிவுப்போட்டி: 156-ல் வெற்றி பெற்றவர்கள்**

1. A. ரெபேக்காள் - மதுரை
2. Tmt. மரகதம்திரவியம் - கோம்பை
3. V. வீரராகவன் - க.பரமத்தி
4. Y. தேவதேசம் - கல்லார்
5. S. ஜெயராஜ் - பொள்ளாச்சி
6. Mrs. ஜெசிமனுவேல்ராஜ் - நாசரேத்
7. G.P. ஏசையன்ராஜ் - கோபி
8. M. வேலு - ஆம்பூர்
9. K. மோகன் - நாமக்கல்
10. D. சாந்தாதேவி - தேனி
11. M. ராமச்சந்திரன் - தூத்துக்குடி
12. Miss. கிப்ட்ராஜாமணி - தூத்துக்குடி
13. Sis. கஸ்தூரி - தூத்துக்குடி
14. T. ராஜாத்தி - கோம்பை
15. M. சாலொமோன் - கோடை
16. S. லதா - பண்ணைபுரம்
17. Mrs. பொன்னிவிக்டர் - தாராபுரம்
18. R. மோசேதயாளன் - தூத்துக்குடி
19. M. கலைச்செல்வி - தூத்துக்குடி
20. A. பிரில் தெரசா - தூத்துகுடி
21. J. மேரிசாரா - சமயநல்லூர்
22. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
23. J. ரேச்சல்தமிழரசி - பசுமலை
24. D. டேவிட் - சென்னை
25. S. மரியாள் - மணலி
26. G. பூங்கோதை - ஈரோடு
27. P. சரவணகுமார் - ஈரோடு
28. R. ஸ்டெல்லா இளமதி - தராபுரம்
29. S.R. பெரியசாமி - சேலூர்
30. S.A. சாமுவேல் - பரமத்தி
31. Ira. எதிராசன் - சங்கரி

# வாசல்களைத் திறவுங்கள்

## Open Doors

*J.C.Choate*




**ச பை யி ன்** ப ணி சு வி சே ஷ த் தை உலகத்திற்குப் பிரசங்கிப்பதே ஆகும். நாம் சபையின் அங்கத்தினர்கள் என்றால், பிறகு அதுவே **நம்முடைய** பணியாகும். அந்தப் பணியைச் செய்யாமைக்கு அடிக்கடி நாம் மன்னிப்புகளைக் கோருகிறோம். நாம் அதிகவேலையிருக்கிறது.... அல்லது அதிக வேலையோடு தொடர்புடையவர்களாயிருக்கிறோம்..... செய்யவேண்டிய அந்த வேலையைச் செய்வதற்கு நமக்குப் பணம் தேவையாயிருக்கிறது...... மேலும் நாம் சொந்த இடத்திற்கே தேவையாயிருக்கும் போது உலகத்தின் மற்றப்பகுதிக்கு ஏன் செல்ல வேண்டும்? ஜனங்கள் ஆர்வமில்லாமலிருக்கிறார்கள் என்றும், இலக்கியம், ரேடியோ மற்றும் டி.விக்கு செலவழிப்பது பணவிரயமாகிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்படிச்செய்யும் போது சபை வளராமலிருப்பதும் கர்த்தர் நாம் செய்யும்படிக்கு நமக்குக் கொடுத்தபணி செய்யப்படாமலிருப்பதும் ஆச்சரியமல்ல.

சுவிசேஷம் அதிகமான ஆத்துமாக்களைச் சென்றடையும் படிக்கு நாம் என்ன செய்யவேண்டுமென சபையின் மூப்பர்களும் அங்கத்தினர்களும் தீவிரமாக யோசிக்கவேண்டியது அவசியம். ஒவ்வொருநாளும் பெருகிக் கொண்டேயிருக்கிற மக்கள் தொகையில் ஜனங்கள் உண்டு, தேவையும் பெரியதாயிருக்கிறது. இது நம்மை நோக்கி வருகின்றதென்றால் பிறகு நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா? மற்றவர்களும் இரட்சிக்கப்பட்டவர்களாயிருப்பதைப் பார்க்க நாம் விரும்புகிறோமா? கர்த்தர் நம்மை செய்யும்படிக்குக் கேட்டுக்கொண்டதை செய்ய நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கிறோமா?

சந்தர்ப்பத்தின் வாசல்கள் எங்கும் காணப்படுகின்றன. நாம் நம்முடைய கண்களைத் திறந்து அவைகளைக் காணவேண்டியது அவசியம். தருணங்கள் இல்லாதது போல காணப்பட்டால், நாம் தருணங்களை **உருவாக்கலாம்**. அவற்றை எவ்வாறு உருவாக்குவது? ஓரளவு **முயற்சிசெய்வதன்** மூலம். ஒரு காரியம் வாய்க்கவில்லையென்றால், இன்னொன்றிற்கு முயற்சி செய்யுங்கள். விட்டு விடாதீர்கள். நாம் தொடர்ந்து அதை நடப்பிப்போமென்றால், வாசல் நமக்கு திறக்கும், ஒரு முறை அந்த வாசல் வழியே சென்றால், மற்ற வாசல்கள் திறக்கும், சீக்கிரமாய் நாம் செய்ய வேண்டிய பணிகளை அதிகம் பெற்றவர்களாயிருப்போம், அனைத்து பலனையும் பெறும்படிக்கு உதவியை நாடுகிறவர்களாவோம்.

திட்டங்களை உருவாக்குவதிலும் இலக்குகளை நிர்ணயிப்பதிலும் நான் ஒரு பெரிய விசுவாசியாகயிருக்கிறேன். நீங்கள் செய்யாத போது, எதைச்



## சபை அமைப்பு

### CHURCH ORGANIZATION

- சுயாதீன சபைகள் - அப்.14:23
- கிறிஸ்து இயேசுவுக்கே அடிமை - 1பேது.5:1-4
- மூப்பர்களால் வழிநடத்தப்படுதல் - தீத்து1:5-9; எபி.13:17
- உதவிக்காரரால் வழிநடத்தப்படுதல் - 1தீமோ.3:8-13
- போதகர்களால் போதிக்கப்படுதல் - எபி.5:12-14
- பிரசங்கியார்களால் போதிக்கப்படுதல் - ரோமர்10:13-15
- அங்கத்தினர்களால் வழிநடத்தப்படுதல் - ரோமர்12:4-8

**செப்டம்பர் மாதம் சுதந்திர தினம் கொண்டாடும் நாடுகள்**



7 - பிரேசில்
16 - மெக்ஸிகோ
18 - சிலி
21 - ஆர்மீனியா

**செப்டம்பர் மாதம் முக்கிய நிகழ்வுகள்**

1-1875 மதுரையிலிருந்து திருச்சி வரை முதன் முதலாக புகைவண்டி இயக்கப்பட்டது.
2-2012 சுனிதா வில்லியம்ஸ் விண்வெளியில் பறந்து சாதனை படைத்தார்.
3-1939 இரண்டாம் உலகப்போர் தொடங்கியது

## கிறிஸ்தவத் தொழுகை

### Christian Worship



- ஆவியோடும் உண்மையோடும் - யோவா.4:24
- வாரத்தின் முதல்தோறும் - அப்.20:7
- கர்த்தருடைய பந்தி - 1கொரி.11:20-29
- பாடல் -எபேசி.5:19; கொலோ.3:16
- கொடுத்தல் - 1கொரி.16:1,2
- ஜெபித்தல் - அப்.2:42; 1கொரி.14:15
- போதித்தல் - அப்.20:7

## உண்மையான சபை தோன்றிய வரலாறும்
## பிரிவினை சபைகள் தோன்றிய வரலாறும்

**<u>உண்மையான திருச்சபை</u>**

**“இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை” மத்தேயு 16:18**

| சபை | வருடம் | தோற்றுவித்தவர் | இடம் |
|---|---|---|---|
| **கிறிஸ்துவின் சபை** | கி.பி.33 | கிறிஸ்து | எருசலேம் |
| ரோமர்16:16 | | மத்தேயு16:18 | அப்.2:14 |
| எபேசியர்5:32 | | அப்.20:28 | ஏசாயா2:2-4 |
| கொலோ1:18 | | எபேசியர்1:22 | லூக்கா24:47-49 |
| | **<u>பிரிவினைக்கூட்டம்</u>** | | |
| 1. கத்தோலிக்க சபை | கி.பி.607 | மூன்றாம் போனிபஸ் | ரோம் |
| 2. லுத்தரன் சபை | கி.பி.1517 | மார்டின் லூத்தர் | ஜெர்மனி |
| 3. இங்கிலாந்து சபை | கி.பி.1534 | எட்டான் ஹென்றி | இங்கிலாந்து |
| 4. கால்வினிஸ்ட் சபை | கி.பி.1555 | ஜான் கால்வின் | ஸ்விட்சர்லாந்து |
| 5. பிரிஸ்பிட்டேரியன் சபை | கி.பி.1560 | ஜான் நாக்ஸ் | ஸ்காட்லந்து |
| 6. காங்கிரிகேஷனலிஸ்ட் சபை | கி.பி.1592 | இராபர்ட் பிரவுன் | ஹாலந்து |
| 7. பாப்டிஸ்ட் சபை | கி.பி.1607 | ஜான் ஸ்மித் | ஆம்ஸ்டர்டாம் |
| 8. அமெரிக்கன் பாப்டிஸ்ட் சபை | கி.பி.1629 | ரோஜர் வில்லியம்ஸ் | அமெரிக்கா |
| 9. நண்பர்கள் ஐக்கிய சபை | கி.பி.1665 | டெர்பி ஜார்ஜ்பாக்ஸ் | இங்கிலாந்து |
| 10. மெத்தடிஸ்ட் சபை | கி.பி.1739 | ஜான் வெஸ்லி பால் | இங்கிலாந்து |
| 11. கடைசிகால புனிதர்கள் சபை | கி.பி.1830 | ஜோசப் ஜான் ஸ்மித் | நியூயார்க் |
| 12. ஏழாம் நாள் சபை | கி.பி.1843 | வில்லியம் மில்லர் | நியூயார்க் |
| 13. கிறிஸ்தவ விஞ்ஞான சபை | கி.பி.1881 | மேரி பெக்கர் எட்டி | போஸ்டன் |
| 14. யேகோவா சாட்சிகள் | கி.பி.1884 | சார்லஸ் டி.ரஸல் | பென்சில்வானியா |
| 15. தேவனுடைய சபை | கி.பி.1886 | ரிச்சர்ட் ஸ்பர்லிங் | டென்னிஸி |
| 16. நசரேயர் சபை | கி.பி.1895 | பி. எப். பிரீஸ் | கலிபோர்னியா |
| 17. பெந்தெகொஸ்தே சபை | கி.பி.1901 | சில குழுவினர் | இலங்கை |
| 18. அசெம்பிளி ஆப் காட் சபை | கி.பி.1914 | சில குழுவினர் | ஹாட்ஸ் பிரிஸ் |
| 19. இன்னும் அநேகம்.............................. | | | |

**“மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்ற, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்” என்றார் இயேசு (மத்தேயு 15:9)**



செய்வதற்கும் நீங்கள் **எதிர்பார்க்க** மாட்டீர்கள் - மேலும் வழக்கமாக நீங்கள் எதையும் செய்ய மாட்டீர்கள்! பல வருடங்களாக இந்தியாவில் ஊழியஞ்செய்து கொண்டு வருகின்றோம், இந்திய அரசாங்கம் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில் தன்னுடைய திட்டங்களை நிர்ணயிக்கிறதை நான் கவனித்தேன். அவர்கள் அதிமுக்கியமான தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த திட்டங்களை செயல்படுத்தும்படிக்கு உதவிக்காக மற்றநாடுகளை நாடி தங்களுடைய இலக்குகளை அடைகின்றனர். ஒரு திட்டம் நிறைவேறி அந்த இலக்குகளை அடைந்த போது, அவர்கள் வளர்ச்சியோடு கூட மற்றொரு ஐந்தாண்டுத் திட்டத்தினை வெளியிடுவார்கள்.

திட்டமிடாததும் இலக்குகள் நிர்ணயிக்கப்படாததுமான ஒரு வியாபாரத்தை எனக்குக் காண்பியுங்கள் நான் உங்களுக்குத் தோல்வியை கொண்டுவருகிற ஒரு வியாபாரத்தை காண்பிக்கிறேன். இந்தியா முழுவதும் சிறிய வியாபாரங்களையும், பழக் கடைகளையும், இன்னும் இது போன்ற பலவற்றை நான் கண்டிருக்கிறேன். சொந்தமாக கடைகளை வைத்து நடத்துகின்ற அவர்கள் தாங்கள் செய்கின்ற தொழிலில் திருப்தியடைகின்றனர். ஒரு நாளைக்கு, வாரம், மாதம், மற்றும் ஆண்டிற்கானத் தேவைகளைப் பூர்த்திசெய்யும்படிக்கு கூடுமான அளவு சம்பாதித்து, அவர்கள் மகிழ்ச்சியாயிருக்கின்றனர். ஆனால் மற்றவர்களோ அவற்றில் திருப்தியடைவதில்லை. அவர்கள் தங்களுடைய வியாபாரம் விருத்தியடைந்து கடைசியில் நகரத்தின் வேறொரு பகுதியில் ஒரு கடையை ஆரம்பித்து, தொடர்ந்து இன்னொரு கடை, இன்னொரு கடை என ஏற்படுத்துகின்றனர். அவர்கள் அந்த நகரில் அதிகமான கடைகளையோ அல்லது வியாபாரங்களையோ நடத்துபவர்களாயிருக்கின்றனர். ஆனால் அவைகள் அவர்களுக்குப் போதுமானதாயில்லை. அவர்கள் தொடர்ந்து மற்ற நகரங்களுக்கும் முடிவாக நாடு முழுவதிலுமுள்ள நகரங்களுக்கும் நகருகின்றனர். அவர்களுடைய தரிசனம் மற்ற நாடுகளுக்கும் விரிவடைந்து செல்லுவதற்கான தருணங்களை ஏற்படுத்துகிறதாயிருக்கிறது. நாம் எல்லோரும் துரித உணவு வியாபாரங்கள், குளிர்பானக் கம்பெனிகள், கார்கள், ஆகாயவிமானங்கள் மேலும் உலகமுழுவதிலும் காணப்படுகின்ற பெயர் பெற்ற தயாரிப்புகள் போன்றவைகள் பற்றி நன்கு அறிந்திருக்கிறோம். இப்பேர்பட்ட உலகளாவிய விற்பனை எதிர்பாராதவிதமாக நிகழவில்லை. இவைகள் அந்தந்த தலைவர்கள் கொண்டிருந்த தரிசனம், உருவாக்கின திட்டங்கள், உலகையடைய நிர்ணயித்த இலக்குகள் போன்றவற்றால் நிகழ்ந்தது. மிகக் கடினமான உழைப்பு, உரிமையாளர் முதற்கொண்டு அவரோடு ஒத்துழைத்த சக உழைப்பாளிகளோடு வெற்றிபெற மேற்கொண்ட உழைப்பு போன்றவைகளே இந்த நிகழ்விற்கு ஆதாரம், ஆனால் அவர்களுடைய முயற்சிகள் முடிவிலே இலக்குகளை அடைவதோடுகூட முடிசூட்டப்பட்டன.

கர்த்தருடைய ஜனங்களாகிய நாம், இவ்வுலகில் மிகச்சிறப்பான உற்பத்திப்பொருளைக் கொண்டிருக்கிறோம்: அது சுவிசேஷம், இயேசு

கிறிஸ்துவினுடைய நற்செய்தி, மேலும் அவர் தருகிறதான இரட்சிப்பு. நாம் சத்தியத்தை உடையவர்களாயிருக்கிறோம். இப்போதைக்கு, இந்த உற்பத்திப் பொருளின் மேல் விசுவாசம் கொண்டுள்ளவர்கள் மேலும் மற்றவர்களை இந்த இரட்சிப்பிற்குள் கொண்டுவரும்படி என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றிற்கு முதலீடு செய்ய தன்னார்வமுள்ள ஊழியர்கள் தான் நம் அனைவருடைய தேவையாயிருக்கிறது. சில லௌகீக உற்பத்திப் பொருளை விற்பனை செய்கின்ற மனிதனைப் பற்றிய காரியம் என்ன? அவன் வாழ்வதற்குத் தேவையானவற்றை உற்பத்திசெய்ய வேண்டியவனாயிருக்கிறான். நம்மைக்குறித்தும், மனிதவர்க்கத்திற்கென்று நாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற உற்பத்திப் பொருளைக் குறித்ததுமான காரியம் என்ன? நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்ல விரும்பினால் நாமும் கூட கட்டாயமாக உற்பத்தி செய்யவேண்டும்.

எனது சொந்த அனுபவத்ததைப் பொறுத்த மட்டில் என்னுடைய குடும்பமும் நானும் பலவருடங்களுக்கு முன்பாகவே இந்தியா வர விருப்பப்பட்டோம். நாங்கள் விசா பெறும்படிக்கு பல முறை முயற்சித்தோம் ஆனால் பெற முடியவில்லை. நாங்கள் முயற்சியை கைவிட்டிருந்திருக்கலாம் ஆனால் நாங்கள் விடவில்லை. மாறாக நாங்கள் பல வருடங்களாக பாகிஸ்தான் சென்றோம், மீண்டும் இந்தியா வர முயற்சித்தோம் ஆனால் ஸ்ரீலங்கா வழியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். கடைசியாக நாங்கள் இந்தியாவிற்குள் நுழைந்தோம். தொடர்ச்சியான விசா பிரச்சனையின் காரணமாக இரண்டு வருடங்களுக்கு நாங்கள் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டியவர்களாயிருந்தோம். அந்த சமயத்தில் ஸ்ரீலங்காவில் வானொலி நிலையம் துவங்கப்பட்டது. இந்தியாவிற்கெனவும், ஆசியாவிற்கெனவும், பலமொழிகளில் வானொலி நிகழ்ச்சியை ஒலிபரப்பும்படியான சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவ விடவில்லை. மேலும், நாங்கள் இலக்கியத்தை பலமொழிகளில் (வேதாகம அஞ்சல்வழி பாடத்திட்டங்கள், மாத இதழ்கள், துண்டுப்பிரதிகள், மற்றும் புத்தகங்கள்) அச்சிட்டு பிரசுரிக்கும்படிக்கு ஒரு மாபெரும் முயற்சி மேற்கொண்டோம். இலக்கியத்தின் வாயிலாகவும், வானொலி வாயிலாகவும் நேபாளம், சிங்கப்பூர், கிழக்குமலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், மியான்மார், மற்றும் ஆசியா, ஆப்பிரிக்காவிலுள்ள நாடுகளிலும் உலக முழுவதிலும் ஊழியம் செய்யும்படிக்கு இது வழி நடத்தியது. இன்று இந்தியாவிலேயே தொலைக்காட்சி ஒலிபரப்புகிறதான டி.வி. நிகழ்ச்சி மூலம் சுவிசேஷம் பரவுவதற்கான வாசல் திறக்கப்பட்டுள்ளது! மற்றபடி தேவன் வாசல்களைத்திறந்தார், நாங்கள் அதன் வழியாக மற்ற வாசல்களை கண்டடையும்படி சென்றோம். கர்த்தருடைய ஊழியத்தை விரிவாக்கும்படியான வாசல்கள் திறக்க காத்திருப்பீர்கள் என்றால் உங்களுக்கும் எங்களுக்கும் எவ்விதமான வாசல்கள் திறக்கப்பட்டிருக்கும் என்பதை அவர் அறிவார்.

என்னுடைய குடும்பமும் நானும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கும் கர்த்தருடைய சபையை ஸ்தாபிப்பதற்கும் பல லட்ச மக்களை கொண்ட



அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.....அன்றியும், **அவர்** ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கும் எவ்விதத்திலும் **தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது**'' (எபி.2:11,14,15,17).

''......**கிறிஸ்துவோ** அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான **குமாரனாக** உண்மையுள்ளவராயிருக்கிறார்; ...நாமே அவருடைய வீடாயிருப்போம் ......கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்''(எபி.3:6-14). கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கி, மனுஷசாயலானது போல, அவருடைய சகோதரரும் கிறிஸ்துவினுடைய சகல பரிபூரணத்தினால் நிறையப்படும்போது அவர்களும் திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மாறுவார்கள்!

''தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, **திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு**, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது'' (2பேதுரு1:3,4).

''**நீங்கள்** அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், **தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்**...'' (எபே.3:19). தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களை ''.....தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்'' (ரோம.8:29).

''உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா?..... கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்'' (1கொரி.6:15,17). எனவே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனிதவர்க்கத்திற்காக தொடர்ந்து மத்தியஸ்தராய் கிரியை நடப்பிக்கும்படிக்கு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றிருக்கிறார். 1தீமோத்தேயு2:5-ன்படி, **கிறிஸ்து இயேசு மனுஷனாக** தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் தேவனுடைய குமாரனாகவும், மனுஷகுமாரனாகவும்: உயிர்த்தெழுந்தது, மறுரூபமாக்கப்பட்ட நமது இரட்சகராகவும் இருக்கிறார். நாமனைவரும் ஆவிக்குரியபிரகாரமாக அவருக்குள் ''திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்காளக மாறியிருக்கிறோம்''.

நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்'' (கலா.3:26,27;4:6,7).

**கிறிஸ்துவின் சகோதரத்துவத் தொடர்ச்சி**

வேதவாக்கியங்களில் கிறிஸ்து பரத்திற்கு எழுந்தருளின பிறகு, கிறிஸ்துவோடுகூட நம்முடைய சகோதரத்துவத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான நம்முடைய உறவினை ஏற்படுத்தி தேவனுக்கும் கிறிஸ்துவுக்குமிடையேயுள்ள முடிவில்லா பிதா-குமாரன் உறவினை பல குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன:

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாகவும் மனுஷகுமாரனாகவும் மாம்சத்திலே பிறந்தார். அவர் வானத்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட இரட்சகராக, தேவனுடைய குமாரனாகவும் அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் பிறந்திருக்கிறவர்களுக்கு சகோதரராகவும் நிலைத்திருக்கிறார். அவரோடுள்ள சகோதரத்துவத்தின் மூலமே நாம் தேவனுடைய குமாரர்களாக அழைக்கப்படக் கூடியவர்களாயிருக்கிறோம்.

''நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; **தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாமே;** கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்'' (ரோம.8:16,17). யோவான்1:1-14-ன்படி ஆதியிலிருந்தே, வார்த்தை தேவனோடிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது, இந்தக்கூற்று தேவத்துவத்தில் சமத்துவத்தைக் காட்டுகின்றது. மேலும் அந்த வார்த்தை தம்மை வெறுமையாக்கி (பிலி.2:7), மனுஷ சாயலாகி, தேவனுடைய குமாரனாகத் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவராய் தம்மைத் தாமே தாழ்த்தி, தேவனுடைய முதற்பேரானவராகி தேவனுடைய சுதந்தரரானார். இதைப்போல தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறப்பதன் மூலம் நாம் கிறிஸ்துவினுடைய சகோதரரும், சகோதரிகளுமாக மாறும்போது, நாம் தேவனுடைய ஜனங்களும் கிறிஸ்துவுடனேகூட சுதந்தரருமாக இணைக்கப்படுகிறோம்.

''எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதனிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்; .....ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும்



பட்டணங்களில் நுழைந்திருக்கிறோம். நாங்கள் அங்கு சென்றபோது ஒரு ஆத்துமாவைக்கூட அறியவில்லை, ஆனால் நாங்கள் அங்கே இருந்தோம், மேலும் நாங்கள் கர்த்தர் எங்களோடிருந்தார் எனவும் அங்கு ஊழியஞ்செய்ய எங்களுக்கு அருளப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டோம். முதல் ஞாயிறு நாங்கள் எங்களுடைய ஹோட்டல் அறையிலேயே தேவனை ஆராதிக்கவேண்டியவர்களாயிருந்தோம், பின்பு ஒரு வாடகை வீட்டில் அல்லது எங்கெல்லாம் நாங்கள் சென்றோமோ அங்கெல்லாம் ஆராதனை செய்தோம். வழக்கமான அந்த ஞாயிற்றுகிழமையில் எங்களோடு ஆராதனை செய்யும்படி யாரோ ஒருவரை கண்டுபிடித்துக்கொண்டோம், அதை நாங்கள் தொடர்ச்சியாகக் செய்கையில், நாங்கள் அநேகம் அநேகம் பேர்களை எங்களோடு வேத ஆராய்ச்சி செய்யும்படி கண்டுபிடித்தோம்! சீக்கிரமாய் அங்கே மனந்திரும்புதல்கள் நடைபெற்றது. நான் மதசம்பந்தப்பட்ட புத்தக சாலைகளையும், வேதாகம சங்கங்களையும், சமயக் கூட்டங்களையும் கூட (ஒருமித்துப்போக அல்ல, தொடர்பு ஏற்படுத்தி நாங்கள் இருக்குமிடத்தினை ஜனங்கள் அறிந்து கொள்ளும்படிக்கு), சந்தித்தேன், கைப்பிரதிகளையும் அழைப்பு அட்டைகளையும் அச்சிட்டு கடைகளில் இருப்பவர்களுக்கும், சந்தையிலும் அல்லது யாரையெல்லாம் நாங்கள் சந்திக்கிறோமோ அவர்களையும் எங்களுடைய கூட்டங்களிலும் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்ய கலந்து கொள்ளும்படி அழைத்தோம். நான் நம்முடைய அஞ்சல் வழி பாடத்திட்டத்தினை செய்தித்தாளில் விளம்பரப்படுத்தினேன். மேலும் எங்கெல்லாம் வாய்ப்புண்டோ, அங்கு நான் விரைந்து உபதேசித்து உள்ளூர் செய்திதாட்களிலும் விளம்பரப்படுத்தினேன். இதன் விளைவாக ஜனங்களோடு அறிமுகமானோம், கூட்டங்களுக்கு அவர்களை அழைத்தோம், அவர்களுடைய வீடுகளில் வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தினோம், அவர்களில் அதிகமானோர் மனந்திரும்பினார்கள், கற்பிக்கவும் போதிக்கவும் சிலருக்கு கற்றுக்கொடுத்து பயிற்சியளித்தோம், இன்றோ வானொலி நிகழ்ச்சியிலும், இந்திய தொலைக்காட்சி நிலையங்களிலும் மேலும் ஆசியாவின் மற்ற நாடுகளிலும் சுவிசேஷத்தை அறிவிக்கிற மூப்பர்களையும் பிரசங்கியார்களையும் நாங்கள் பெற்றிருக்கிறோம். இது நாங்கள் செய்ததை நொடிப்பொழுதில் வெளிப்படுத்துகிறது. யாரெல்லாம் திறந்த வாசல்கள் வழியாகச் செல்ல ஆயத்தமாயிருக்கிறார்களோ அவர்களோடு கூட எங்களால் தொடந்து பணியாற்ற இயலுகிறது. நம்மில் எங்களுடைய பூரண இலக்குகளை அடையாதபோதிலும், செய்யவேண்டிய காரியங்கள் அதிகமிருக்கிறபடியால், நாம் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய காரியத்தை பரப்பவிரும்புகிறபோது, அதைச் செய்ய அவர் நம்மை ஆசீர்வதிப்பார் என எங்களால் உறுதியாக அறிவுறுத்த முடிந்தது.

கிறிஸ்து, ''....நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற்16:15,16) என்றார். மறுபடியும், அவர், ''....இதோ,

வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (யோவா.4:35) என்றார். இன்னொரு சமயம் அவர், ''..... அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்'' (லூக்.10:2) என்றார்.

இயேசு, ''கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும் (மத்.7:7,8) எனவும் துரிதப்படுத்தினார். இந்தக்காரியங்கள் நிறைவேறும்படிக்கு, ஒரு தனிமனிதன் இதற்கான முயற்சியினை கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டுமென, இது குறித்ததான வாக்குத்தத்தங்களை தயவுகூர்ந்து கவனியுங்கள். ஆனால், தேவனாலே எல்லாம் கூடும் (19:29) என்பதை நினைவுகூருங்கள், மேலும் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோம.8:31). மறுபடியும் கிறிஸ்து; நாம் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினால், நம்முடைய தேவைகள் எல்லாம் கொடுக்கப்படும் (மத்.6:33) என்றார், மேலும் கர்த்தர் உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நம்மோடு இருப்பேன் எனவும் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். பவுல் தன்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய தனக்குப் பெலனுண்டு என அறிவித்தான் (பிலி.4:13).

என்னுடைய சகோதரரே, இதைப்பற்றி சற்று சிந்தியுங்கள். நாம் உலகைப் பார்க்க தரிசனத்தோடு கூட நம்முடைய கண்களை ஏறெடுக்கும்போது, நாம் இசைந்த உதவிக்காரர்களாக மாறுவோம்: தேவன் நம்மை பெலப்படுத்துகிறவர், கிறிஸ்து நம்மை வழிநடத்துகிறவர், சுவிசேஷம் (இரட்சிப்பிற்கென்று தேவவல்லமையுடையது) பிரசங்கிக்கப்பட வேண்டியது, மேலும் நாம் கர்த்தருடைய பிள்ளைகளை நமக்கு உதவிசெய்யும்படிக்கும், ஊக்கப்படுத்தும் படிக்கும் பெற்றுள்ளோம். இதுமாத்திரமல்ல, ஆனால் மனந்திருந்திய ஒவ்வொருவனும் இன்னொரு வேலையாளாகவும், சுவிசேஷம் பரம்பி மகிமைப்படுவதற்கு அதிகமான பண உதவியைக் கொண்டுவருகிறவனாகவும் மாறவேண்டும். நாம் இதைச் செய்ய ஆயத்தமாயிருக்கும்போது எந்த நேரத்திலும் உலகத்திற்கு கிறிஸ்துவை எடுத்துச் செல்ல முடியும். நாம் எழுந்து வாசல்களைத் தட்ட ஆரம்பித்து நமக்கென்று திறக்கப்பட்ட வாசல்களுக்குள் உட்பிரவேசிப்பது அவசியம். வாசல்களும் அதற்கு மேலாக வாசல்களும் கர்த்தருக்கென்றும் அவருடைய பணிக்கென்றும் பெரிய காரியங்களைச் செய்ய வழிநடத்தும் என்பதே வாக்குத்தத்தமாயிருக்கிறது. நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து ''இதோ அடியேன், கர்த்தாவே, என்னை அனுப்பும்'' எனக் கூறுவோமாக.

**இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்;** வெளி.3:20




பெண்கள் பகுதி

# இயேசு கிறிஸ்து நித்திய பலி

## JESUS CHRIST THE ETERNAL SACRIFICE

The Choice of Families
குடும்பங்களின் மேன்மை

**-Betty**




நம்முடைய சரீரப்பிரகாரமான பிறப்பில் நாம் விரும்புகின்ற ஒரு குடும்பத்தில் பிறக்க அந்தக் குடும்பத்தைத் தெரிவு செய்ய இயலாது. நாம் நம்முடைய பிறப்பிற்குப்பின் வெளிப்படையாக நாம் பிறந்த அந்த குடும்பத்தின் அங்கமாக இருந்துகொண்டிருந்தோம்.

ஆவிக்குரிய பிரகாரமாக, நாம் எந்தக்குடும்பத்தின் அதாவது தேவனுடைய அல்லது சாத்தானுடைய குடும்பத்தின் அங்கமாக இருப்போம் என்பதைத் தெரிவு செய்துகொள்கிறோம். வெறுமனே தெரிந்துகொள்வதினால், தேவனுடைய பிள்ளையாக நம்மை மாற்றிக்கொள்ளுகிறதில்லை. அவருடைய குடும்பத்திற்குள் பிறக்க நாம் தண்ணீரின் பிறப்பு மற்றும் ஆவியின் பிறப்பாகிய ஞானஸ்நானம் என்ற பிறப்பிற்கான வழிமுறையின் வழியாகச் செல்லவேண்டும்.

1பேதுரு1:22,23 மற்றும் 2:1:2 இந்த ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி மேலும் தெளிவுப்படுத்துகிறது: ''.....ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே...... அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே... இப்படியிருக்க.....நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்''.

''அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை (கிறிஸ்துவை) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனால் பிறந்தவர்கள்'' (யோவா.1:12,13).

''நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே...நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்களே..... மேலும்